**Date : 08.12.2021.**

**O.S. No.59/2015**

**பி.வா.சா.2 திரு.சுவாமிநாதன்**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது தகப்பனார் பெயர் சுப்ரமணி.தாயார் பெயர் வெள்ளைத்தாய். எனது பெற்றோர்களுக்கு வாதி மற்றும் பிரதிவாதிகள் மட்டும் தான் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எங்களது பூர்வீக சொத்துக்கள். என் தந்தையுடன் பிறந்த 3 சகோதரிகள் உயிருடன் இல்லை என்றால் சரிதான். எனது அத்தைமார்கள் உயிருடன் இருக்கும் போது தாவா சொத்துக்களில் பாகம் கோரி அறிவிப்பு எதுவும் அனுப்பினார்களா என்றால், அவர்கள் அனுப்பவில்லை,ஆனால் அவருடை வாரிசுகள் சொத்தில் பாகம் கேட்டார்கள். மேற்சொன்ன விவரத்தை எனது முதல் வாக்குமூலத்திலும், எனது எதிர்உரையிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது தவறு என்றும், தாவா சொத்துக்கள் அனைத்தும் எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது என்றும், அதில் வாதிக்கும் பாக உரிமை உள்ளது என்றும், ஆனால் அவருக்கு கொடுக்ககூடாது என்ற எண்ணத்தில் நானும், 8வது பிரதிவாதியும் செயல்படுகிறோம் என்றால் சரியல்ல. எனது சகோதரிக்கு தாவா சொத்துக்களில் பாகம் இல்லை என்று நாங்கள் யாரும் கூறவில்லை, ஆனால் பூர்வீக சொத்து என்பதும் அனைத்து வாரிசுகளும் சமமாக பிரித்துக்கொள்ளவேண்டும் என்று தான் வழக்காடுகிறோம். எதிர்வழக்குரையில் உரிய தரப்பினர்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்று நாங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு முன்பே எனது தாயார் இறந்து விட்டார் என்றால் சரிதான். எனது தகப்பனார் 2013ல் இறந்தார்.எனது தகப்பனார் இறந்த பின்பு 2015ல் தாவா தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். எனது தாயாரின் நகைகளை குடும்பத்தின்

நலனிற்காக எனது தந்தை விற்றுவிட்டார் என்று எதிர்உரையில் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான்.4வது அயிட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள சொத்து விரங்கள் சரிதான். தாவா சொத்துக்களில் பலன்தரும் மரங்கள் நிறைய உள்ளன என்றால் சரிதான். அவைகளை வைத்தது எனது தந்தை தான் என்று சொன்னால் சரியல்ல. அண்ணன் சோமசுந்தரம் தான் உருவாக்கினார். அந்த மரங்களுக்கு 50 வயது இருக்கும் என்று சொன்னால் சரியல்ல, 30 அல்லது 35 வயது இருக்கலாம். சோமசூந்தரத்திற்கு வயது தற்போது 62 இருக்கலாம். அவர் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளார். அதன்பின்பு வானொலி பெட்டியில் பழுதுபார்க்கும் வேலை செய்து வந்தார். எனது தந்தை ஆடியோ சர்வீஸ் செய்து வந்தார் என்றால் சரிதான். எனது தந்தை ஆடியோ சர்வீஸ் நிறுவனத்தில் கிடைத்த வருமானத்தைக் கொண்டு தான் எங்களை பராமரித்தார். தாவா சொத்துக்களில் இருந்து கிடைத்த வருமானத்தை கொண்டு பராமரிக்கவில்லை. எனது தந்தை எனது சகோதரர் முருகன், சண்முகம், பழனியாண்டவர், கந்தசாமி, ஆகியோர்களுக்கு ஆடியோ சர்வீஸ் வைத்து கொடுத்தார். எனக்கும் எனது தந்தை சென்னையில் ஆடியோ சர்வீஸ் வைத்துக்கொடுத்தார். ஆனால் அவர் காலமாவதற்கு முன்பே பொறுப்பை அவரிடம் ஒப்படைத்துவிட்டேன். சென்னையில் உள்ள மயிலாபூரில் எனக்கு ஆடியோ சர்வீஸ் வைத்துக்கொடுத்தார். சென்னையில் உள்ள ஆடியோ சர்வீஸின் மூலம் வாங்கப்பட்ட சொத்துக்களையும் இந்த வழக்கில் சேர்க்க வேண்டும் என்று சொன்னால், அதற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. மற்ற அனைவருக்கும், எனது தந்தை தொழில் வைத்து கொடுத்து, ஆனால் சோமசுந்தரத்திற்கு தாவா சொத்துக்களை கொடுத்ததாக 8ம் பிரதிவாதி கூறினால் அது சரிதான். தாவா சொத்துக்கள் 8ம் பிரதிவாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்ட சொத்து அல்ல என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்களில்

தனக்கும் பாகம் உள்ளது என்று சகோதரி லட்சுமியும் மனு போட்டுள்ளார் என்றால் சரிதான். அவருக்கும் பாகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். எனது தந்தையின் ஆடியோ சர்வீஸ் தொழில் இன்னும் பொதுவாகத்தான் உள்ளது என்று நான் கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ-6 முதல் 8 ஆவணங்கள் எனது தந்தை உயிருடன் இருக்கும்போது ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரிதான். சென்னை மயிலாபூரில் உள்ள ஆடியோ சர்வீஸ் எனது தந்தையின் மறைவிற்கு பிறகு நடக்கவில்லை. வாதி கேட்ட பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல, வாதிக்கும் பாகம் உள்ளது.

***8வது பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.***

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

sd/-G.Vijaya,
முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.